காங்கிரஸ் தேர்தல் பிரசாரபடலம் ஆரம்பம்!

Phone No 4502

விலை அரை அணு

Regd. No. M. 5458

இலங்கை 5 சதம

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணதுரை M.A.

MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (20—5—50) ❋ வெளியூர் (21—5—50) [இதழ் 257

மாற்றுக் கட்சிகளுக்கு மக்கள் வாக்கு கிட்டாதாம்

ராமராஜ்யம் நிறுவும்பணி இனிமேல்தான் ஆரம்பமாம்

—(0)—

காந்திய அடிப்படையில் பொருளாதாரத் திட்டம் தீட்ட உத்தேசம்

காங்கிரசுக்கு காளாவின் சப்பைக்கட்டு!

அந்நிய ஆட்சியிலிருந்து நாம் விடுபட்டுவிட்டோம். இதனுல் நாம் அடைய வேண்டியவற்றையெல்லாம் அடைந்து விட்டதாக அர்த்தமில்லை. நாடு இன்னமும் முழு விடுதலை அடையவில்லை. முழு விடுதலைக்குப் பாடுபட வேண்டியது நமது கடன். அப்பணி இப்பொழுதுதான் ஆரம்பமாகியுள்ளது.

நாம் பொருளாதார விடுதலைக்காகப் போராட வேண்டியிருக்கிறது. ஆனுல், நமது பொருளாதாரக் கொள்கை பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, அமெரிக்கா, ரஷியா முதலிய மேனுட்டுப் பொருளாதாரக் கொள்கைகளைப் போலிராது. அசல் காந்திய பொருளாதாரத் திட்டத்தையே நாம் கடைப்பிடிப்போம்.

காங்கிரஸ் போன்ற ஒரு பெரிய ஸ்தாபனத்தில், ஒரு சில கள்ளமார்க்கெட்காரர்கள் இருப்பது சகஜம். இதனுல் காங்கிரசையே குறை கூறுவது சரியல்ல.

அடுத்த தேர்தலுக்குள் காங்கிரஸ் தனது திட்டங்களை மக்களிடையே பரப்பும். இந்திய மக்கள் காங்கிரசுக்கே தமது வாக்குகளை அளிப்பார்கள் என்பது திண்ணம். கம்யூனிஸ்டு கட்சிக்கு யாருமே வோட் அளிக்கமாட்டார்கள் என்பது உறுதி.

இது, அனைத்திந்திய காங்கிரஸ் பொதுச்செயலாளர் தோழர் காளா வெங்கட்ராவ், அண்மையில் திருச்சூரில் பொதுக்கூட்டமொன்றில் பேசியபோது வெளியிட்டுள்ள கருத்துக்கள்.

பேசுபவர் காளா வெங்கட்ராவ், நாடாளும் கட்சியின் பொதுச்செயலாளர்!

அப்படிப்பட்டவர் கூறுகிருர், தனது கட்சியின்வேலை இப்பொழுதுதான் ஆரம்பமாகிறது என்று அதுமட்டுமல்ல, "இனிதான் நாம் பொருளாதார விடுதலைக்குப் பாடுபடவேண்டும்." என்று. நிதானமாகக் கூறிவிட்டு அதுவும் பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, அமெரிக்கா, ரஷியா ஆகிய எந்த மேல்நாட்டுப பொருளாதார முறையாக [illegible] என்றும் [illegible] கூறுவருர்.

எவ்வளவு அழகான பேச்சு! எத்துணை கருத்தாழமுடைய பேச்சு! எவ்வளவு பயனுள்ள வாசகங்கள்!

அறுபது ஆண்டுகளாக மக்களிடையே தொடர்புடைய கட்சி, 'ஆரம்பாடு பட்டு' அந்நியரைவெளியேற்றி விட்டுத் தன்னுட்சி பெற்ற கட்சி, பதவிக்கு வந்து மூன்றரை ஆண்டுகட்குப் பின்னர் "இப்பொழுது தான் நமது பணி ஆரம்பமாகிறது" என்று பேசுவதும், பொருளாதாரத் திட்டத்தைக் குறித்துப் பேசுகையில் மேனுட்டுத் திட்டங்களை அறவே ஒழித்துவிட்டு,

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

தோழர் டிரிகிவ்லி பாரிஸ் செல்கிருர்

ஸ்டாலின் கடிதத்துடன் மாஸ்கோவை விட்டுப் புறப்பாடு

லண்டன், மே 19—

மார்ஷல் ஸ்டாலினிடமிருந்து ஒரு முக்கிய கடிதத்துடன் ஐ. நா. காரியதரிசி ஜெனரல் டிரிகெவ்லே இன்று புறப்படுகிருர் என்று, இங்கு செய்தி கிடைத்திருக்கிறது.

தோழர் டிரிகெவ்லே முதலில் பாரிஸ்சென்று ஷுமனைப் பார்த்துவிட்டு, பின்னர் பிரிட்டன் செல்வார்.

மாஸ்கோ பேச்சுவார்த்தைகளில்அதிருப்தி ஏற்படவில்லை என்று அவர் கூறியபோதிலும், உடனடியான பலன் ஏற்படுமா என்பது பற்றி அவரே சந்தேகமாகக் கூறியிருந்ததால், இச்செய்தி ஓரளவுக்கு ஆச்சரியத்தையே ஏற்படுத்தியிருக்கிறது.

இவர் ஸ்டாலினுடன், சர்வதேச நிலைமை, மிரட்டல் யுத்தம், அணுகுண்டு கண்ட்ரோல் முதலியவை குறித்து விவாதித்ததுடன், பாதுகாப்பு கௌன்ஸில் நாடுகளின் அயல்நாட்டு மந்திரிகள் அடிக்கடிக் கூடிப் பேசவேண்டும் என்பதையும் வற்புறுத்தியதாகத் தெரிகிறது.

ஸ்டாலின் திடகாத்திரத்துடன் இருக்கிருர்

பொய்வதந்திகள் பரப்புபவருக்கு ட்ரிக்-வி-லி சூடு!

மாஸ்கோ, மே. 18—

திங்களன்று மார்ஷல் ஸ்டாலினைச் சந்தித்து 90 நிமிடம் பேச்சுநடத்தியஐ.நா. பொதுக் காரியதரிசி தோழர் ட்ரிக்வி.லி "ரஷியாவின் தலைவருடைய உடல் நிலையைப்பற்றிப் பரப்பும் வதந்திகள், உண்மைக்கு மாறுபட்டவையும், மட்டரகமான பொய்ப்பிரசாரமாகும்." என்று கூறினுர்.

சோவியத் தலைவர்களுடன் பேட்டிகண்டதைப் பற்றிப் பத்திரிக்கை நிருபர்கள் கூட்டத்தில் பேசுகையில், அவர் கூறியதாவது 'நீங்கள் எவ்வளவு அருகில் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்களோ, அவ்வளவு பக்கத்தில் நான் தோழர் ஸ்டாலினுடன் அமர்ந்திருந்தேன். 1946-ல் நான் அவரைக்கண்டதுபோல அவ்வளவு நன்ருகத்தான் அவர் இருக்கிருர்.

"ஸ்டாலின்என்றோ இறந்துவிட்டார். இரும்புத்திரை இச்செய்தியை இன்னும் ரகசியமாகவே வைத்திருக்கிறது" என்று அமெரிக்கப் பத்திரிகைகள் ஓயாமல் எழுதிவருகின்றன. அமெரிக்கப் பத்திரிகைகள் தோழர் ஸ்டாலினைப்பற்றி எழுதியதைப் படித்த அமெரிக்க மக்கள், ஸ்டாலின் மனிதனு, அல்லது ஒரு பேயா என்ற முடிவு காணுமல் தவிக்கிருர்கள்.

"டைம்" என்னும் அமெரிக்க வார இதழின் வார விற்பனை, எழுபது லட்சம் பிரதிகளாகும்; இந்தப் பொறுப்பு வாய்ந்த இதழ்கூட ஸ்டாலினைப்பற்றித் தூற்ருமல் இருந்துவிடவில்லை, "ஸ்டாலின் உடல் நிலை மிகக் கேவலமாகி விட்டது. இன்றோ, நாளையோ இறக்கும் தருவாயில் இருக்கிருர்" என்றுமட்டரகமாக எழுதிவிட்டது. முதலாளிகளின் பிரதிநிதிகளைப் பார்க்கத் தோழர் ஸ்டாலின் மறுத்ததே இந்த வதந்திகளைக் கட்டி விட்டதற்குக் காரணம்.

சில மாதங்களுக்குமுன் இந்தியப் பிரதிநிதி தோழர் ராதா கிருஷ்ணனைக் கண்டு பேசினுர். இன்று ஐ. நா. பொதுக்காரியதரிசி தோழர் ட்ரிக்விலியைச் சந்தித்து ஒன்றரை மணிநேரம் அளவளாவினுர்.

லெனின் செத்துவிட்டதால் பொதுவுடமைக் கொள்கை செத்தாவிட்டது? அதே போன்றுதான் தோழர் ஸ்டாலின் இறந்தாலும், யார் இருந்தாலும் இறந்தாலும், பொதுவுடமைக் கொள்கையின் அசைக்க முடியாத ஆணிவேர் ஊன்றிவிட்டது.

—

பாதுகாப்பிலிருந்த பத்திரிகை ஆசிரியர் விடுதலை

எர்ணுகுளம், மே 18—

கம்யூனிஸ்டு கட்சியின் அனுதாபி என்று சந்தேகிக்கப்பட்டு, எர்ணுகுளம் போலீசாரால் கைது செய்யப்பட்டு, சிறையில் காவல் கைதியாக வைக்கப்பட்டிருந்த 'தீபம்' என்னும் மலையாள தினசரி பத்திரிகையின் துணை ஆசிரியர் தோழர் சி. ஆர். குஞ்சனி நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

'திராவிட நாடு' படிக்கத் தடை

ஈரோட்டுக்கு சர்க்கார் உத்திரவு!

"அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்ற பத்திரிகைகளில் 'திராவிடநாடு" இல்லையாகையால், ஈரோட்டு முனிசிபல் படிப்பகத்துக்கு அனுப்பப்படும் திராவிடநாட்டுப் பத்திரிக்கையை நிறுத்திவிடுங்கள்" என்று, நம்முடைய ஈரோட்டு ஏஜெண்டுக்கு முனிசிபல் கமிஷனர் அறிவித்துவிட்டார்.

இந்த நடவடிக்கை மாகாண கல்வி அதிகாரியின் உத்திரவின்படி, ஈரோட்டு நகராண்மைக்கழக அதிகாரி எடுத்துக் கொண்டிருக்கிருர்.

நகராண்மைக் கழகங்களின் சுயேச்சைப் போக்கு தோழர் மாதவமேனன் கல்வி மந்திரியான பிறகு. பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதென்று மட்டும் கூறிக்கொள்ளவிரும்புகிறோம்.

—

சீன மொழி உலக மொழியாகாததேன்?

சிங்கப்பூர், மே 19—

சீன மொழி 2000 வருஷங்களுக்கு முன்னரேயே ரோமன் லிபியில் எழுதப்பட்டு, உபயோகிக்கப்பட்டிருந்தால் இன்று அது ஒரு உலக பாஷையாக விளங்கியிருக்கும் என்று அமாய சர்வகலாசாலையைச் சேர்ந்த பேராசிரியர் ஜோ. பீனமின் கூறுகிருர். ஆங்கில மொழியை அவர் மிகவும் பாராட்டி அது உலக மொழியாக விளக்கக்கூடியது என்று அவர் கூறினுர்.

ஆள் குறைப்பு, சம்பளக் குறைப்புக் கண்டனம்

கி. பஞ்சாப் ரயில்வே தொழிலாளர் மாநாடு

புதுடில்லி, மே 19—

கிழக்குப் பஞ்சாப் ரயில்வே தொழிலாளர்கள் சங்கத்தின் ஆண்டுமாநாடு, அம்பாலாவில் மே 20 உ முதல் இரண்டு நாட்கள் நடைபெறவிருக்கிறது.

அகில இந்திய ரயில்வே தொழிலாளர் பெடரேஷன் உபதலைவர் தோழர் சிவநாத் பானர்ஜி, இதற்குத் தலைமை வகிப்பார்.

ரயில்வேக்களில் ஆட்களைக் குறைத்து, சம்பளக் கமிஷன் சிபார்சுகளை இன்னும் அமுல் நடத்தாது, இவைபற்றி கண்டித்து சமிக்ஞை ஸ்டிரைக் நடத்தவேண்டியது அவசியமா என்பது குறித்து இம்மாநாட்டில் முடிவு செய்யப்படும்.

பார்லிமெண்ட் செலக்ட் கமிட்டிக்கு விடுத்துள்ள இரு தொழில் மசோதாக்களையும் கண்டித்து, இம்மாநாடு தீர்மானம் நிறைவேற்றும். இம்மசோதாக்களைத் தொழிலாளர்களின் அபிப்பிராயம் அறிய, வெளியிடப்படவேண்டுமென்றும், அத்தீர்மானம் வற்புறுத்தும் எனத் தெரிகிறது.

மாலை மணி

சென்னை 20—5—50 சனிக்கிழமை

சேரி மக்கள் அவதி

சென்னை நகரில் இருநூற்றுக்கு மேற்பட்ட சேரிகள் உள்ளன. இவைகளில் மூன்றில் இரண்டு பங்கு சேரிகள் தனிப்பட்டோர் நிலங்களிலும், சர்க்கார் நிலங்களிலும் உள்ளன. மற்ற மூன்றில் ஒரு பகுதி சேரிகள்தான் நகர கார்ப்பொரேஷனுக்குச்சொந்தமான நிலத்தில் கட்டப்பட்டுள்ளன. நகராண்மைக்கழகத்தின் சொந்த நிலத்தில் கட்டப்பட்டுள்ள சேரிகளில், குறிப்பிட்ட அளவுக்குக் குடிதண்ணீர் வசதி, விளக்குவசதி, கழிவுநீர் வசதி ஆகிய எல்லாம் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. சர்க்காருக்குச் சொந்தமான நிலங்களிலும், தனிப்பட்டோருக்குச் சொந்தமான நிலங்களிலும் கட்டப்பட்டுள்ள சேரிகள்தான், மிகவும் சீர்கேடானநிலையில் உள்ளன. இப்பகுதிகளில் குடிதண்ணீர் வசதி, விளக்குவசதி ஆகியவைகள் கார்ப்பொரேஷன் பணம் செலவழித்து செய்து கொடுக்கச் சட்டம் இடம் தரவில்லை. ஆகையால் ஒன்று தனிப்பட்டோர் நிலங்களில் உள்ள சேரிகளுக்கு அவர்கள் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்த வேண்டும். இல்லாவிட்டால், சேரிகள் கட்டப்பட்டுள்ள நிலங்களைக் கார்ப்பொரேஷனிடம் ஒப்படைத்து, சீர்திருத்துவதற்காகப் பண உதவியும் செய்யவேண்டும். இந்த அடிப்படைமாற்றம் செய்யாவிட்டால் சேரிகள் அபிவிருத்தி செய்வதென்று எவ்வளவுபேசியும் பயனில்லை.

மற்றும் தனிப்பட்டோர் நிலத்தில் கட்டப்பட்டுள்ள சேரிவாழ்வோர் பெருந்தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனரென்று ஓயாமல் செய்திகள் வந்து குவிகின்றன. வற்புறுத்தி இவர்களை வெளியேற்றி; குடிசைகள் இருக்குமிடங்களில் ஏழடுக்கு மாடிகள் கட்ட வேண்டுமென்பதே இவர்கள் எண்ணம். பம்பாயிலும் இதேபோன்றுதொல்லை ஏற்பட்டதால்; குடியிருப்போரை வெளியேற்றுவதைத் தடுத்து உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதே நடவடிக்கையை சென்னையில்எடுத்துக் கொள்ளாவிட்டால், பல ஆயிரக்கணக்கான மக்கள் வீடிழந்து பாதையோரங்களில் வாழும் நிலையடைவார்களென்று எச்சரிக்கிறோம். சேரிகள் நிலையை அபிவிருத்தி செய்யாவிட்டாலும், இருக்குமிடத்தையும் இழந்து மக்கள் நடுத்தெருவில் நிற்பதை ஏற்படாமல் தடுக்கவேண்டியது ஆளவந்தாரின் பொறுப்பாகும்.

நகர அபிவிருத்தி திட்டத்தின் பேரால் வேறு, சேரி மக்கள் தொல்லைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். மைலாப்பூர், மாம்பலம் மாடிவீடுகள்ன் அழகை அடுத்துள்ள சேரிகள் கெடுத்து விடுகின்றன வென்று கூறிப் பழங்குடி மக்களையும், மீன்பிடிப்போரையும் அப்புறப்படுத்த முயற்சிகள் நடக்கின்றன. தகுந்த நஷ்ட ஈடு தருவதாகவும்வேறுஇடத்தில் குடிசைகள் கட்டிக் கொடுப்பதாகவும் அவர்களுக்கு உறுதி தரப்பட்டிருக்கிறது மீன்பிடித்து வாழும் மக்கள் கடற்கரையோரத்தில் குடியிருந்தால்தான், வசதியோடு வாழ முடியும். அதையொட்டித்தான் ஆயிரமாயிரமாண்டுகளாக அவர்கள் கரையோரங்களில் வாழ்க்கை நடத்தி வருகிறார்கள் அழகு படுத்தவேண்டுமென்பதே நகர அபிவிருத்திக் கமிட்டியின் யோசனையானல், அழகான மாளிகைகள் கடற்கரையில் கட்டித் தொழிலாளருக்கு ஆளுக்கு ஒரு அறையாக வேண்டுமானல் ஒதுக்கி விடட்டும்!

நகரில் உள்ள சேரிகளை அபிவிருத்தி செய்ய மத்திய சர்க்காரைக் கடன்கேட்க மூன்று கோடி ரூபாய் கடன், கேட்க வேண்டுமென்று சென்னை நகராண்மைக் கழகம் தீர்மானித்திருப்பதைப் பாராட்டுகிறோம். இந்தக்கடன் தொகை கிடைக்குமா, கிடைக்காதா என்ற சந்தேகம் நமக்கிருந்தாலும், எப்படி ஒரு வேளை கிடைக்குமானல் குடிசைகளால் அடைக்கப்பட்டதால் சேரிகள்' என்று பெயர் பெற்றுள்ள ஏழை மக்கள் வாழும் பகுதிகளை அபிவிருத்திச் செய்யத் தகுந்த முறையில் பயன் படுத்தப்படுமென்று கருதுகிறோம்.

சேரிகள் பிரச்சினை நகரை மட்டும் பற்றியதல்ல சென்னை மாகாணத்தில்தான் 'சேரிகள்' 'அக்ரகாரங்கள்' அதிகமாக உள்ளன. பெரும்பாலான சேரிகள் தனிப்பட்டோர் நிலத்தில்தான் கட்டப்பட்டுள்ளன. கோயில் நுழைவு, தீண்டாமை ஒழிப்பு. ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டங்கள் உள்ளிட முற்போக்குக்கு வழிவகுக்கும் திட்டங்கள், சட்டங்களான பின்பு சேரிவாழும் மக்கள் பலர் வீடு, வாசல் இழக்க வேண்டிய நிலையை அடைந்துள்ளார்கள். சேரிகள் கட்டப்பட்டுள்ள தனிப்பட்டநிலத்தையெல்லாம் நஷ்டஈடு தராமல் எடுத்துக்கொள்ள இன்றைய சர்க்காருக்குத் திட்டமும்கிடையாது, திறமையும் கிடையாது; ஆகையால் நஷ்டஈடு கொடுத்துத்தான் எடுத்துக்கொள்ள முடியும் என்ற நிலையிருப்பதால் அதற்குப் போதிய பணம் சென்னை சர்க்காரிடமில்லையாகையால், சென்னை நகராண்மைக் கழகத்தைப் போன்று மத்திய சர்க்காரிடம் தேவைப்படும் பணத்தைக் கேட்டு வாங்கி, அவரவர் வீடு கட்டி வாழும் நிலத்தைச் சேரி வாழும் மக்களுக்கே தர சென்னை சர்க்கார் தகுந்த முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

டில்லி நகரசபைத் தேர்தல்

சோஷலிஸ்டுகள் போட்டியிடுவர்

புதுடில்லி, மே 17—

டில்லி கார்ப்பரேஷனுக்கு நடைபெறவிருக்கும் தேர்தலில், சோஷலிஸ்டுகளும் போட்டியிடத் தீர்மானித்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

பார்லிமெண்டிற்கு நடைபெறும் தேர்தலில், டில்லி தொகுதிக்கு அபேட்சகர்களை நிறுத்தவும், டில்லி சோஷலிஸ்டு கட்சி முடிவு செய்திருப்பதாகவும் தெரிகிறது.

சோஷலிஸ்ட் கட்சியின் பார்லிமெண்டரி கமிட்டி இதற்கான திட்டத்தை வகுக்கும் வேலையை ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது.

நைரோபியில் பொதுவேலை நிறுத்தம்

நைரோபி, மே 19—

கிழக்கு ஆப்பிரிக்க தொழிற் சங்கத் தலைவர்கள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பொதுவேலை நிறுத்தம் நைரோபியில் ஆரம்பமாகியிருக்கிறது.

டாக்ஸி டிரைவர்கள், ஹோட்டல் தொழிலாளர்கள் ஸ்டிரைக் செய்திருக்கின்றனர். போலீஸார் ஜருராக ரோந்து வருகின்றனர்.

தங்கக் கடவுள் "அபேஸ்!"

நியூயார்க், மே 19—

காஸ்டா ரீகாவின் முக்ய தெய்வமென கருதப்பட்டதன் சிலையை, யாரோ திருடிச் சென்றுவிட்டதின் விளைவாக காஸ்டாரீகா எல்லை மூடப்பட்டுவிட்டது. இச்சிலை தங்கத்தினால் செய்யப்பட்டதுடன் ரூ. 45½ லக்ஷம் மதிப்புள்ளதாம்.

டிட்டோ ஐ. நா. விடம் முறையிடுவாரா?

பெல்கிரேட் மே. 19—

யூகோவை எதிர்த்து ரஷ்யா நடத்திவரும் செஷபிடிப்போரைக் குறித்து, டிட்டோ ஐ. நா. விடம் முறையிடலாம் என்று இங்கு நம்பப்படுகிறது.

யூகோ எல்லையில் ரஷ்ய நடவடிக்கைகள் அதிகரித்திருப்பது குறித்து, யூகோமந்திரிபார்லிமென்டில் உறிவிருப்பது ஒருபெரும் ஆபத்து ஏற்படவிருக்கிறது என்பதை, எச்சரிக்கை செய்வதாக இருக்கிறது என்றுகருதப்படுகிறது.

1949-ல் ஒலிம்பிக் விளையாட்டுகள்

ஹெல்சிங்கியில் நடைபெறும்

லண்டன், மே 19—

1952-ல் ஒலிம்பிக் விளையாட்டுகள் பின்லாந்தின் தலைநகரமான ஹெல்ஸிங்கியில் நடைபெறவிருக்கிறது. இதற்கு நூற்றுக்கணக்கான மக்கள் இப்பொழுதே தங்கள் ஸீட்களை ரிஸர்வ் செய்துகொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள்.

இந்திய விமானிகளுக்கு நீச்சுப்போட்டிப் பந்தயம்

புது டில்லி, மே 19—

இந்திய விமானப்படை நீச்சுத் தடாகத்தில் மே 20-ந் தேதி விமானிகளுக்காக நீச்சுப்போட்டியொன்று நடைபெறவிருக்கிறது.

மெக்கா பிரயாணிகள் கட்டணம்

மெக்கா, மே 19—

மெக்கா யாத்திரைக்காக யாத்ரீகர்கள் கட்டவேண்டிய கட்டணம் சென்ற வருஷத்திலிருந்தது போல் தான் என்றும் உயர்த்தப்படவில்லை என்றும் அறிவிக்கப்படுகிறது.

ஏற்றுமதிப் பொருள்களின் விலைக்கட்டுப் படுத்தப்பட வேண்டும்

சர். ஏ. இராமசாமியார் கருத்து

ஸிட்னி, மே 19—

தென்கிழக்கு ஆசியா திறமையாகத் தன் தேவைகளுக்குத் தானே உதவிசெய்ய, ஆஸ்திரேலியாவின் கோதுமை உள்பட இந்நாடுகளிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் எல்லாப் பொருள்களின் விலைக் கட்டுப்பாடு அவசியம் என்று, இந்தியக் கோஷ்டித் தலைவர் சர். ஏ. ராமஸ்வாமி முதலியார் ஒரு பேட்டியின் போது கூறினார்.

இவர் ஆஸ்திரேலிய மந்திரிகளை சந்தித்துப் பேசும்போது, ஆஸ்திரேலிய கோதுமையை இந்தியாவுக்கு நியாயமான விலைக்குவிற்கவேண்டும்என்று கேட்டுக்கொள்வார்என்றுதெரிகிறது. இக்கோரிக்கை உத்தியோகப்பூர்வமானதலலஎன்ருலும், ஒரு இந்தியன் என்ற ஹோதாவில் தோழர் முதலியார் இந்த யோசனையை ஆஸ்திரேலிய மந்திரிகளிடம் தெரிவிப்பார்.

அக்கம்பக்கத்து நாடுகளுடன் இந்தியா சௌஜன்ய உறவைக் கொண்டிருப்பதை விளக்கி அவர் கூறியதாவது:- இம்மாதிரி சௌஜன்ய உறவு ஏற்படுத்திக்கொள்ளும் நோக்கம், ராணுவ அரசியல் நோக்கம் எதையும் அடிப்படையாகக்கொண்டதல்ல. எல்லா நாடுகளுடனும் நல்லுறவு கொண்டிருக்கவேண்டும் என்கிற [illegible] உத்தேசித்தித்[illegible] வகுக்கப்பட்டிருக்கிறது.

தென்கிழக்கு ஆசியாவில் காலனி ஆதிக்கம் செத்துவிட்டது அல்லது செத்துக் கொண்டுவருகிறது. எல்லா நாடுகளும் சுதந்திர நாடாகத் திகழவேண்டும் என்பதே இந்தியாவின் எண்ணம்.

இந்தோனேஷ்யா சுதந்திரம் அடையவேண்டும் என்று நாங்கள் பிரார்த்தித்தோம்; எங்களாலான உதவி செய்தோம், அவர்களுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்கிறோம். ஜூன் 7ல் பண்டித நேரு இந்தோனேஷ்யா செல்வதால் இந்த உறவு இன்னும் பலப்படும்.

மின்சாரத்துக்குப் பதில் நிலக்கரி வாயு

சென்னை நகருக்குப் புதிய திட்டம்

சென்னை நகரில் வீட்டு விளக்குகளுக்காகவும், தொழிற்சாலைகளிலும், மின்சாரத்திற்குப் பதில், நிலக்கரி வாயுவை உபயோகிக்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக பேக்கர் கம்பெனி சமர்ப்பித்துள்ள திட்டமொன்றை சென்னை நகரசபை பரிசீலனை செய்யும்

திருவொற்றியூரில் நிலக்கரி வாயு உற்பத்திச் செய்யும் சாலையை அமைத்து, குழாய்கள்மூலம் நகருக்குச் சப்ளை செய்யப்படுமென்பதே சமர்ப்பிக்கப்பட்டுள்ள திட்டத்தின் முக்கியசாரம்

ஜெக் மாணவி விருப்பம்

இந்தியாவில் தங்க அனுமதி கோருகிறார்

புதுடில்லி, மே 17—

இந்தியாவில் படித்துவந்த ஜெக் மாணவி மிஸ் மிலடா கலமோவா, தன் ஜெக் பிரஜா உரிமையைவிட்டு இந்தியாவிலேயே தங்கிவிட விரும்புகிறாள். இவருக்கு உலகப்பிரஜையாகவேண்டும் என்பது விருப்பமாம். இவர் இந்தியாவில் அதிக காலம் தங்க அனுமதி கோரியிருக்கிறார். இவர் கம்யூனிஸ்ட் புரட்சி ஜெக்கில் நடைபெறுவதற்கு முன்னமேயேஇந்தியாவிற்குப் படிக்க வந்தவர்.

இப்பொழுதுள்ள சர்வதேசச் சட்டபடி, உலகப் பிரஜைகளுக்குச் சட்ட பூர்வமான அந்தஸ்துகிடையாதாகையால் இவர் ஜெக் பிரஜையாகவே இருக்கவேண்டும். அல்லது இந்திய பிரஜையாக தன்னைப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

நைரோபியில் சுதேசிகள் கிளர்ச்சி

நைரோபி, மே 18—

கம்யூனிஸ்டு தொழிற்சங்கத் தலைவர் ஒருவரைக் கைது செய்ததற்காக, நைரோபியில் ஆப்பிரிக்க சுதேசிகள் நகர முழுவதிலும் வேலை நிறுத்தம் செய்தார்கள். கிளர்ச்சி செய்த ஆப்பிரிக்க சுதேசிகளின் கூட்டத்தைக் கலைக்கப் போலீசார் கண்ணீர்ப்புகை உபயோகித்தனர்.

நகரசுத்தித் தொழிலாளர்கள், வேலையை நிறுத்திவிட்டார்கள்; கடைகளிலும், சிற்றுண்டிச் சாலைகளிலும் வேலை செய்யும் தொழிலாளிகள், வாடகை மோட்டார் ஓட்டிகள், அரசாங்க ஊழியர்கள் ஆகிய எல்லோரும் வேலையில் ஈடுபட மறுத்துவிட்டார்கள்.

நேருக்கு வரவேற்பு

சிங்கப்பூர் நகர சபை அளிக்க வேண்டுமென கோரிக்கை

சிங்கப்பூர், மே 19—

இந்தோனேஷ்யாவுக்கு வந்துவிட்டுத்திரும்பு போது பண்டித நேரு ஒரு நாள் சிங்கப்பூரில் தங்க உத்தேசித்திருப்பதால், அன்று அவருக்கு சிங்கப்பூர் நகரசபை வரவேற்பளிக்கவேண்டும் என்று முனிசிபல் பிரஸிடெண்டிற்கு சிங்கப்பூர் இந்திய காங்கிரஸ் தலைவர் தோழர் ஜி. சாரங்கபாணி கேட்டுக்கொண்டிருக்கிறார்.

இதற்கான எல்லாவித ஏற்பாடுகளையும் செய்து தருவதில், சிங்கப்பூர் இந்திய காங்கிரஸும், இந்திய மக்களும் பூரணமாக ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

காங்கிரஸ் தேர்தல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காந்தியம் என்ற பெயரிலே பழமைக்கு வழிகாட்டுகிறது என்ருல், இது எத்தனை வருந்தத்தக்க விஷயம் பாருங்கள்.

காலம் வேகமாக மாறிக் கொண்டு வருகிறது. பொதுவுடமைத்தத்துவம் உலகின் பெரும் பகுதியை விழுங்க ஆரம்பித்துவிட்டது. எஞ்சியுள்ள பகுதிகளில் மக்களின் எண்ணம், எழுச்சி முதலியன புரட்சிகரமாகமாறிக்கொண்டு வருகிறது. இப்படிப்பட்ட நிலையிலேதான் காந்தியம், ராம ராஜ்பம் என்றெல்லாம் உபதேசம் செய்து கொண்டிருக்கிருர், பொறுப்புமிக்க பதவியிலிருக்கும் ஒருவர் என்ருல், இது சிந்திக்க வேண்டிய விஷய மன்ருே!

சரி போகட்டும்; காளாவின் பேச்சு காலத்துக்கு கந்த தல்ல, கருத்துள்ள பேச்சல்ல என்று எண்ணி ஒதுக்கி விடலாமென்ருலோ, அதற்கும் வழியில்லை.

காங்கிரசே மக்களின் மனதிற்குகந்த ஸ்தாபனம். காங்கிரசைத் தவிர்த்து மற்றகட்சிகளுக்கு மக்கள் வோட் அளிக்க மாட்டார்கள் என்றெல்லாம் அவர் மார் தட்டிப் பேசுவதைப் பார்க்கும்போது, நான் அவரை என்னவென்று அழைப்பது என்பதே புரியவில்லை.

காங்கிரசைத் தவிர, பிற கட்சிகளுக்கு வோட் அளிக்க மாட்டாகள் என்பது திண்ணம்.

கம்யூனிஸ்டு கட்சிக்கு நாடு வோட் அளிக்காது என்பது உறுதி.

என, இரண்டு பக்கமும் திண்மையான "நம்பிக்கைச் சுவர்"களை எழுப்பி விட்டு, அது கண்டு களிப்பெய்துகிருர் காளா!

இதுகாறும் காங்கிரசிடம் எவ்விதத் திட்டமும் இல்லை. இனிமேல் தான் திட்டம் தீட்டப்போகிருேம்; அதுவும் புதுமைக்குவழிகோலாக காந்திபத் திட்டம் என்றெல்லாம் கூறிவிட்டு, இப்படிப்பட்ட நிலையிலே உள்ள காங்கிரசுக்குத்தான் மக்கள் வாக்களிப்பர் என்றுஎண்ணுவது எதிர்பார்ப்பதுஒன்று ஏமாளித்தனத்தின் பாற்பட்டதாக இருக்கவேண்டும், அல்லது நாடமெக்களை ஏமாளிகள் என்று நினைத்துக் கொண்டு பேசும் பித்தலாட்டப்பேச்சாக இருக்கவேண்டும்.

அடுத்து, கம்யூனிஸ்டுக் கட்சிக்கு மக்கள் வோட்டளிக்க மாட்டார்கள் என்று பேசுவதும் பித்தலாட்டத்தின் பாற்பட்டது. அல்லது பைத்தியக்காரத்தனத்தின் பாற்பட்டதென்றே சொல்ல வேண்டும்,

கம்யூனிஸ்டு கட்சி என்ற பெயரிலே, ஒரு கட்சியை நாட்டிலே நடமாட அனுமதித்திருக்கும் ஜனநாயக வாதிகளைச் சேர்ந்தவர்போல் தம்மைக் கருதிக்கொண்டு பேசுகிருர் தோழர் காளா!

"கம்யூனிசத்தை நாம் குறை கூறவில்லை; கம்யூனிஸ்டுகளை, அவர்தம் நாசவேலைகளைத்தாம் கண்டிக்கிருேம்" என்று உரத்த குரலில் பேசிய உத்தமர்கள், இன்று 'கம்யூனிசம்' என்ற சொல்லையே வெறுக்க ஆரம்பித்து விட்டனர் கம்யூனிஸ்டாக இல்லாவிட்டாலும், கம்யூனிசத்தின் அனுதாபியாக எவரேனும் காணப்பட்டால், அவரையே சந்தேகிக்கின்றனர். சில வேளைகளில்அப்படிப்பட்டவர்களுக்கு இன்னல் தரவும் பின்வாங்குவதில்லை ஆட்சியாளர். சிவப்பு நிறத்தைக் கண்டாலே சீறிப்பாயும் அளவுக்கு ஆளுங்கட்சியினரிடம் மன மாற்றம் தென்படுகிறது. இது ஒருபுறமிருக்க கம்யூனிஸ்டுகளை அடக்குவதாகச் சொல்லிக்கொண்டு சில இடங்களில் மனித வேட்டையாடுகின்றனர் ஆட்சியாளர்.

இப்படிப்பட்ட நிலையிலே தான் கம்யூனிஸ்டு கட்சிக்கு மக்கள் வோட் அளிக்கமாட்டார்கள் என்று அழகுப்பேச்சு பேசுகிருர் காளா. ஏன் இப்படிப்பட்ட பேச்சு? இப்படிப் பேசினுல் காங்கிரஸ் அரசாங்கம் ஜனநாயகத்தைக் கடைப்பிடிப்பதாக மக்கள் நினைத்துக் கொள்வர் என்ற நினைப்பா?

பாவம்! காங்கிரசின் பொதுச் செயலாளர் என்ற காரணத்தால், இப்படிப்பட்ட சப்பைக்கட்டுகள் கட்டியேனும் காங்கிரசைக் காப்பாற்ற வேண்டும் என்று எண்ணுகிருர்போலும் தோழர் காளா!

"சவுக்கடி" வழக்கு

"சவுக்கடி" என்ன [illegible] கத்தை அச்சி [illegible] ந்திடன் வித்தோ பிரஸ் மானேஜிங் டைரக்டர் ஒ. பி. என். அருணுசலம், வெளியிட்ட இரா. க. தங்கப்பழம் எழுதிய எம். எஸ். சிவசுவாமி ஆகியோர் மீது 153 (எ), 292&295 ஐ. பி. சி. என்னும் பிரிவுகளின்படி தொடரப்பட்டிருந்த வழக்கு, 16-5-50 அத்தக்குடி சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் முன்பு எடுத்துக்கொள்ளப்பட்டு, மீண்டும் 27-5-50 க் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

ஸவூதி அரேபியாவில் தஞ்சம்

பெய்ரோ, மே 19—

சிருவின் எல்லையிலுள்ள சாவிஸ்தான் மூஸ்லிம்கள் கம்யூனிஸ்ட் தொல்லை தாங்காமல் ஸவூதி அரேபியாவிற்கு வந்து விட்டனர். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்படி இப்னு ஸவூத் மன்னர் உத்திரவிட்டிருக்கிருர்.

ம. மா. தி. மு. க. மாநாட்டின் வரவேற்பு கமிட்டிக்கூட்டம்

மதுரைமாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாட்டின் வரவேற்புக் கமிட்டிக்கூட்டம், 21—5—50 ஞாயிறு காலை 10 மணிக்கு பசாமுவந்தான் பனகல் இல்லத்தில் நடைபெறும். வரவேற்புக்கமிட்டியினர்கள் தவருது வருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

அன்பன்,

தா. ஆவுடையப்பன்,

வரவேற்புக் கமிட்டி தலைவர்.

கோவை மாநாடு

கோவையில் முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டு வேலைகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டுவருகின்றன.

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழிலும் வித்தர்களாக உள்ளவர்களில் பலர், மாநாட்டில் பங்கு கொள்ள இசைந்துள்ளனர்.

தமிழகத்தின் தனிச் செல்வமாம் குறளை அருளிய வள்ளுவனரின் வாழ்க்கை வரலாற்றினைக் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்அவர்கள், வில்லுப்பாட்டு மூலம் விருந்தாக அளிக்க இசைந்துள்ளார்.

தோழர்கள் சிதம்பரம் ஜெயராமன், திருவாரூர் நமசிவாயம் ஆகிய இசைவாணர்கள், தமிழரின் அகமகிழ, இசைவிருந்தளிக்க வருகிருர்கள்.

நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி, தோழர் சி.என் ஏ குழுவினருடன், இரண்டு நாடகங்கள் நடத்தித்தர இசைந்துள்ளார்.

முத்தமிழ் வளர்ச்சிகுறித்து உடுமலை நாராயணக் கவியின் புதிய பாடல் தயாரிக்கப்பட்டு வருகிறது.

ஆர். எஸ். புரத்திலுள்ள முனிசிபல் பள்ளி வெளியில், 250 × 150 அளவில் கொட்டகை அமைக்கப்பட்டிருக்கிறது

பல்லோரையாலும் பயனும், சுவையும் கிடைக்கும்விதமாக மாநாட்டை நடத்துவதற்காக, வரவேற்புக் குழுவினர் பெரு முயற்சி எடுத்துக்கொண்டுள்ளனர்.

புத்துலகக் கருத்தினைத் தூவிடும் பணியில் ஈடுபட்டுள்ள பேச்சாளர்கள், பலரும் மாநாட்டில் கலந்துகொள்கிருர்கள்.

தி. மா. தி. மு. க. தோழர்களுக்கு வேண்டுகோள்

மார்ச் மாதம் சென்னையில் கூடிய மத்திய தி. மு. கழக செயற்குழுக்கூட்டத்தில், ஜூன் மாதம் 31-ம் தேதிக்குள் உறுப்பினர்சேர்க்கும்பணியை முடித்துவிடவேண்டுமென தீர்மானித்திருக்கிறது. ஆதலால் இதுவரையிலும் என்னிடம் உறுப்பினர் சேர்க்கும் புத்தகம் பெற்றுச் சென்ற தோழர்கள், விரைவில் உறுப்பினர்களைச் சேர்த்து, தலைமைக் கழகத்திற்கு அனுப்ப வேண்டிய சீட்டுகளை அனுப்பிவிட்டு, மாவட்டக் கழகத்திற்கு அனுப்பவேண்டியசீட்டுகளையும், தொகையையும் உடனடியாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அன்பன்

ஜி. பராங்குசம்

துணைச்செயலாளர்

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

21 - 5 - 50

ஆர்காடு :—இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன்.

குடியேற்றம் :—க. அன்பழகன்.

கடலூர் :—சி. பி. சிற்றரசு, இரெ. இளம்வழுதி.

மேலக்கோட்டையூர், சின்னையாபுரம் :—இரா. சு. தங்கப்பழம், எம். எஸ். சிவசாமி.

ஆலத்தூர் :—ஏ. சித்தையன், திருக்குறள் முனுசாமி, குமார தணிகாசலம்.

சிறுத்தொண்டநல்லூர் :—எம். எஸ். இராமசாமி, ச. சிவசங்கு, மணிமொழி, அறவேந்தன்.

அகரப்புதூர் :—பி. கிருட்டினசாமி, பி. எஸ். இளங்கோ, ஆர். இளஞ்செழியன், சாவித்திரி, கூத்தரசன்.

மதுரை :—டி. கே. சீனிவாசன், எஸ். முத்து, எம். அய்யாசாமி.

22 - 5 - 50

மேட்டூர் அணை (சேலம்) :—என். வி. நடராசன்.

சிவத்தையாபுரம் :— எம். எஸ். இராமசாமி, சிவசங்கு, மணிமொழி, அறவேந்தன்.

இனி நடப்பவை

ஆர்காடு:— 21-5-50 ஞாயிறு மாலை 6 மணி அளவில், தி. மு. கழக சார்பில், தோழர் ம.உ. சண்முகம் அவர்கள் தலைமையில் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., என். வி. நடராசன் ஆகியோர் பேசுவார்கள்.

* * *

சென்னை :—21—5—50 காலை 9 மணிக்கு சென்னை, மண்ணடி முத்தமாரிச் செட்டி தெரு, 2-45 இல்லத்தில் தமிழர் முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்போவதால் அக்கழகத்தில் சேர ஆர்வமுள்ள தோழர்கள் வரும்படி வேண்டப்படுகிருர்கள்.

* * *

அகரப்புதூர்:—நேத்தாஜி மைதானத்தில், தி. மு. க. சார்பில் ஓர் பொதுக் கூட்டம் 21—5—50 மாலை 6 மணிக்கு நடைபெறும். தோழர் பி. கிருட்டினசாமி தலைமை வகிப்பார். தோழர்கள் பி. எஸ். இளங்கோ, ஆர். இளஞ்செழியன், சாவித்திரி, கூத்தரசன் ஆகியோர் பேசுவார்கள்.

* * *

கடலூர்:-21-5-50 மாலை 6 மணிக்கு மஞ்சக்குப்பம், ஐந்து கிணற்றம்மன் கோவிலுக்கெதிரில் செல்வம் திடலில், தி. மு. க. சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர் சி. பி. சிற்றரசு, 'தற்கால நிலை' என்பதுபற்றி பேசுவார். தோழர் இரெ. இளம்வழுதி எம்.ஏ. தலைமை வகிப்பார்

* * *

ஆலத்தூர், கள்ளக்குறிச்சி வட்டம்:—21-5-50-ல் தி. மு. க. சார்பில், ஓர் கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர்கள் ஏ. சித்தையன், திருக்குறள் முனிசாமி, குமார-தணிகாசலம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

சென்னை, பிரகாசமபுரம்:—தென் இந்திய சித்த (தமிழ்) மருத்துவ சங்க கூட்டம் 21—5—50 மாலை $5\frac{1}{2}$ மணிக்கு சங்கத்தில் நடைபெறும்.

* * *

பட்டுக்கோட்டை:—விவசாயிகள் இரண்டாவது மாநாடு 21—5—50 காலை 8 மணிக்கு மதுக்கூர் வ. உ. சி. தியேட்டரில் நடைபெறும். தோழர் கே. ராமன் தலைமை வகிப்பார். தோழர் எஸ். ஆர். சுப்ரமணியம் மாநாட்டைத் திறந்து வைப்பார்.

* * *

சங்கரநயினர்கோவில்:—தி. மு. கழகச் செயற்குழுக்கூட்டம்தோழர் டி. ஆர். சுப்ரமணியம் இல்லத்தில், 21-5-50 மாலை மணி 6-க்கு நடைபெறும்.

* * *

வேலூர் :—வேலைத் தமிழ்க் கழகச் சார்பில் இலட்சுமணசாமி டவுன் ஹாலில் 21—5—50 ஞாயிறு மாலை 6 30 மணிக்கு தோழர் மா.வே. மாணிக்க நாய்க்கர் விழா நடைபெறும். அதுபோது தோழர் க. மு கோவிந்தராய நாட்டார் அவர்கள் 'உலகப் பொது தமிழ் எழுத்தொலி' என்னும் பொருள் பற்றி விரிவுரையாற்றுவர்.

* * *

மேலக்கோட்டையூர், சின்னையாபுரம்:—தி. மு. க. சார்பில் 21-5-50 மாலை 7-மணிக்கு தோழர் பொ. சண்முகசுந்தரம் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர்கள் இரா. சு. தங்கப்பழம், எம். எஸ். சிவசாமி ஆகியோர் 'திராவிட முன்னேற்றக் கழகமும் தற்கால அரசியலும்' என்பது குறித்துப் பேசுவார்கள்.

* * *

சத்துவாச்சாரி, குடியேற்றம்-தி. மு. க. சார்பில் 21—5—50 மாலை 6 மணிக்கு, ஆற்றில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும் அதுபோது தோழர் க.அன்பழகன் எம். ஏ. சொற்பொழிவாற்றுவார்.

* * *

உறையூர்:- 21-5 50 காலை 10 மணிக்கு வி. டி. ராஜன் மார்க்கில் தி. மு. க. உறுப்பினர்கள்கூட்டம் நடைபெறும். அதுபோதுகலைஞர் பெயர்ச்சிலைகளைப்பற்றி ஆலோசிக்கப்படும். உறுப்பினர்கள் தவறாது வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

தி. மு. க. கட்டிட நிதி

திராவிட முன்னேற்றக் கழகக் கட்டிட நிதிக்கு, நன்கொடையளிப்போர் பெயர்கள் இனி, வாரத்திற்கு ஒரு முறை வெளியிடப்படும். — (ஆ·ர்)

வெள்ள அபத்தைத் தடுக்க திட்டம்

ஹாங்காங், மே 19—

இராக் (?) லைகர் மத்தாத்தும், கனடாவின் நான்காவது பெரிய நகமமன வின்னிபெக்கும் எதிர்பாராதபடி வெள்ள அபாயத்திற்குட்பட்டிருந்ததால், இனி ஏற்படக்கூடிய வெள்ளத்தைத் தடுப்பதற்காக சினக் கம்யூனிஸ்டுகள் மாபெரும் திட்டம் ஒன்றை நடத்தவிருக்கின்றனர்.

கழக நடவடிக்கைகள்

மலையாண்டிப் பட்டணம் :— (3—5—50) அன்று மாலை தி. மு. கழகக் கிளையின் சார்பாக, மேதின விழா தோழர் ராமசாமி தலைமையில் நடைபெற்றது. அதுபோது தோழர்கள் வெங்கடாசலம், ம. நாராயணன் ஆகியோர் மேதின விழாவைப்பற்றியும், அதை ஏன் கொண்டாடவேண்டும் என்பது பற்றியும் பேசினர். செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

* * *

செயங்கொண்டம் :— 16-5-50 காலை தி. மு. கழக நிர்வாகக்கமிட்டிக்கூட்டம், தோழர் பாஸ்கரன் தலைமையில் காசிம் கடையில் நடைபெற்றது. அடுத்து இவ்வூருக்குவர விருக்கும் தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கு வரவேற்பிதழ் அளிப்பதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* * *

ஆனைமலை:—தி. மு. க. செயற்குழுகூட்டம் 12—5—50 நடைபெற்றது. அதுபோது முன்பு இருந்த செயலாளர் தோழர் ஏ. வி. எம். சாமியை மாற்றி புதுச் செயலாளராக தோழர் ஆர். வீராசவன் அவர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

* * *

வீரநாராயணமங்கலம்:— நதிநர் நல்லிலையத்தில் 11-5-50 அன்று தி. மு. க. உறுப்பினர் கூட்டம் தோழர் செ. சோணாசலம் அவர்கள் தலைமையில் கூடியது. அதுபோது தி. மு. கழகத் தலைமைக் கட்டிட நிதிக்காக தன்னுடைய தொகையை அளிப்பதென தோழர் சோ. சுப்பையன்கொண்டுவந்த தீர்மானத்தை, தோழர் ம. சடையாண்டி ஆமோதிக்க தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

தோழர் சின்னு என்கிற அந்திராஸ் இறந்ததையொட்டி அவருடைய குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தை இக்கூட்டம் தெரிவித்துக்கொள்கிறது.

கழகச் செயலாளர் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

* * *

சங்கரயினர்கோவில்:- இந்நகர், தி. மு. க. செயற்குழுக்கூட்டம் 14-5-50 இரவு பணிமனையில் தோழர் க. சங்கரன் அவர்கள் தலைமையின்கீழ் கூடியது. அதுபோது கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

தொடர்ந்து 3 செயற்குழு கூட்டத்திற்கு வராத செயற்குழு உறுப்பினர்களைக் கமிட்டியிலிருந்து நீக்கப்படுவதற்கு இக்கமிட்டிக்கு அதிகாரம் அளிக்கிறது.

9-3-50 முதல் 28-4-50 முடிய நடந்த பொதுக் கூட்டவரவுசெலவு கணக்கு சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. செயற்குழுக் கூட்டத்திற்கு அசண்டாவில் கையெழுத்து வாங்குவதற்கு தோழர் சங்கரன் அவர்களைத் தீர்மானிக்கப்பட்டது.

நெல்லைமாவட்டக் கழகஅமைப்பு பற்றி பலமுறை தெரிவித்தும், மாவட்ட அமைப்பாளர் இதுவரை கவனம் செலுத்தாததால், அமைப்புகுழு தோழர் என். வி. நடராசன் அவர்களை அவ்வேலையைத் துரிதமாக நடத்த வேண்டுமென இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் இனிது முடிந்தது.

* * *

தென்கோவை :—தி. மு. கழக துவக்கவிழா வரவு, செலவு 8-5-50 இரவு கூடிய செயற்குழு கூட்டத்தில் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. கணக்கு பின்வருமாறு:—

நன்கொடை வரவு 86—14—
உண்டியல்வசூல் 14—0—0 ஆக
வரவு 100-14-0 செலவு 77-11-6
மீதி 23—2—6 நன்கொடைபாக்கி
13—4—0 மீதிஇருப்பு 9—14—6.

கமுதி :—தி. மு. கழக நிர்வாக அமைப்புக் குழு 7-5-50 மாலை கூடியது. அவ்வமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பொதுச்செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்கள் தற்போது மத்திய கழகக் கட்டிட வேலையில் முனைந்து பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள இயலாதிருப்பதால், பொதுக்கூட்டத்திற்கென வசூலிக்கப்பட்டதொகை அனைத்தும் அவரவர்களிடமே திருப்பிக்கொடுத்துவிட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

மத்திய கழகக் கட்டிட நிதிக்கென கமுதி நகர தி. மு. க. சார்பாக 15 ரூபாய் அனுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

* * *

உடுமலை:— 7-5-50 இரவு 7-மணிக்கு கழகக் கட்டிடத்தில் தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் தோழர் எம். எஸ். கனகராசன் தலைமையில் கூடி, கீழ்க்காணும் செயற்குழுவை நியமித்தது.

செயலாளர்:— ஆர். வி. கே. கவிதாகிருஷ்ணன்; துணைச்செயலாளர்:— என். ரங்கசாமி; பொருளாளர்:— எஸ். மாணிக்கம்; விளம்பர உறுப்பினர்:— உடுமலை எஸ். ரவாக், மற்றும் கே. சுப்ரமணியம், எம். நடராசன், எஸ். அம்மாசி. விரைவில் தோழர்கள் மு. கருணாநிதி, சித்தையன் ஆகியோரை அழைத்து ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

* * *

மேலூர்:—13—5—50 மாலை தி. மு. க. செயற்குழுக்கூட்டம் தோழர் வை. தளவாண்டி தலைமையில், தோழர் கா. மு. காதர் மைதீன் கடையில் கூடியது. கூட்டத்தில் கழகம் ஆரம்பமானது முதல் இன்று வரையுள்ள கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

பொங்கல் விழா (14-1-50)
முடிவுவரை வசூல் ரூ. 153-1-0
முடிவுவரை செலவு ரூ. 119-1-0
மீதி இருப்பு ரூ. 34-0-0
15-15-50 முதல் 12-5-50 நடந்த கூட்டம் அதன்முன் 13-5-50 முடிய கழக சம்பந்தமாய் செலவு ரூ. 106-0-6

சோழவந்தான் தோழர் நா. ஆவுடையப்பன் அவர்களுக்கு அன்னு மேலும் வருவதற்காக அனுப்பிவைத்தது. ரூ. 50-0-0

மீதி இருப்பு ரூ. 8-0-0

மீதி இருப்பு ரூபாய் 8-0-0ஐயும் பொருளாளர் தோழர் இரா. வேலுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

அடுத்த மாதம் 10, 11 தேதிகளில் நடக்கவிருக்கும் மதுரை மாவட்ட மாநாட்டிற்கு வரவேற்பு குழுவிற்கென தோழர்கள் பி. காதர்கனியையும், பா. வெள்ளைச்சாமியையும் தேர்ந்தெடுக்கப்பட்டது. பிறகு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கூட்டம் முடிந்தது.

தி. மா. மு. கழகம்

ஆனைமலை, மே 15—

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் காரிய கமிட்டிக் கூட்டம் 15—5—50 காலை ஆரம்ப பாடசாலையில் கூடியது. அது பொழுது செயலாளர், வி. உறுப்பினர், பொ. உறுப்பினர் ஆகியோரின் ராஜினாமாக் கடிதங்களை ஏற்றுக்கொண்டு, பிறகு கீழ்க்கண்ட புதிய செயற்குழுவைத்தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர் :—எ. எம். எஸ். ஹமீது. து. செயலாளர்-எ. வி. அபுசாலி. வி. உறுப்பினர்-சின்னுசாமி ராஜு. பொருள் உறுப்பினர். சஞ்சண்டசாமி, நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

சர்க்கரை உற்பத்தியும் கையிருப்பும்

இந்தியாவிலுள்ள மத்திய சர்க்கரை ஆலைகளில், 1950 ஏப்ரல் 15-ந் தேதியுடன் முடிவடைந்த இரண்டு வாரத்தில், சர்க்கரை ஆரம்பக் கையிருப்பு 1, 49, 56,000 மணங்கும், உற்பத்தி 9, 93,000 மணங்கும் ஆலைகளிலிருந்து அனுப்பியது 9, 56, 600 மணங்கும், இறுதி கையிருப்பு, 1, 49, 93,000 மணங்குமாக இருந்ததாக, கான்பூரிலுள்ள இந்திய சர்க்கரைத் தொழில் ஆராய்ச்சிக் கழக டைரக்டர் 1935-ம் வருஷத்திய சர்க்கரை உற்பத்தி விதிகளின்கீழ் தமக்குக் கிடைத்துள்ள புள்ளி விவரங்களிலிருந்து, தெரிவருவதாக அறிவிக்கிறார், முந்திய பருவத்தில் இதற்குச் சரியான காலத்தில் ஆரம்பக் கையிருப்பு 1. 43, 12,000 மணங்கும், உற்பத்தி 16,66,000 மணங்கும், ஆலைகளிலிருந்து அனுப்பியது 16,12 000 மணங்கும், இறுதிக் கையிருப்பு 1,43, 66,000 மணங்குமாக இருந்தது. பரிசிலனையிலுள்ள 2 வார காலத்துக்கான புள்ளி விவரங்கள் மொத்த உற்பத்திச் சக்தியில் 93. 441 சத விகிதங்கொண்ட 128 ஆலைகள் பற்றியவையாகும். முந்திய வருஷத்துக்கான புள்ளி விவரங்கள் மொத்த உற்பத்தி சக்தியில் 88.5 சதவிகிதம் கொண்ட 119 ஆலைகள் பற்றியவையாகும்.

1949 நவம்பர் முதல் தேதிக்குப் பிறகு உற்பத்தியான சர்க்கரையில் மொத்த அளவு 2,57,34,000 மணங்கு, ஆலைகளிலிருந்து அனுப்பப்பட்டது. 1,09,78,000 மணங்கு. முந்திய பருவத்தில் இந்த அளவுகள் முறையே 2,44,91,000 மணங்கும், 1,55,84,000 மணங்குமாக இருந்தன.

1949-50 பருவகாலத்தில் 1949 நவம்பருக்கு முன்னால் உற்பத்தியான சர்க்கரையின் அளவு 91,000 மணங்கு ஆகும்.

சிறையில் கலகம்

60 பேர் ஓட்டம்

பாரிஸ், மே 16—

லைகோனுக்கு வடக்கில் 6 மைல் தூரத்திலுள்ள சிறை முகாமில், இந்தோசைனா விடமின் தேசியவாதிகள் தாக்கி, கைதிகள் கலகம் செய்து 60 பேர் தப்பியோடி விட்டனர் என்று, பிரெஞ்சு சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

டில்லி விவசாய கல்லூரி மூடப்படும்?

டில்லியிலுள்ள மத்திய விவசாய கல்லூரியை நீடித்து நடத்துவதா அல்லது மூடிவிடுவதா என்பது பற்றி, இந்திய சர்க்கார் சீக்கிரம் ஒரு முடிவு செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கல்லூரியில் தற்போது செய்திருக்கும் ஏற்பாடுகள் நவீன கல்லூரி ஒன்றின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாயில்லை. கல்லூரியை வேறிடத்திற்கு மாற்றுவதென்றால், அதை சர்க்காரின் நிதி நிலைமை அனுமதிக்காது. இந்திய விவசாய ஆராய்ச்சி ஸ்தாபனத்துடன் அந்த கல்லூரியை இணைப்பதென்றால் வருஷா வருஷம் ரூ. 23 லக்ஷம் செலவு ஏற்படும். அவ்வளவு செலவு செய்ய சர்க்காரால் முடியாது. தற்போது அந்தக் கல்லூரியில் புது மாணவர்களை அனுமதிப்பது நின்றுவிட்டது.

கம்யூனிசத்தை ஒழிக்கும் முயற்சி

விட்னி, மே. 19—

தென் ஆசியாவில்கம்யூனிசத்தை ஒழிக்க, காமன்வெல்த் நாடுகள் அடிக்கடி கூடிப்பேசுவதன் பொருட்டும்ஆசியநாடுகளுக்கு உதவி விஷயமாக நடவடிக்கை எடுக்கவும் காமன் வெல்த் டெக்னிகல் பீரோவை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதை இலங்கையில் ஏற்படுத்துவதா, சிங்கப்பூரில் ஏற்படுத்துவதா என்ற பிரச்சினை எழுந்தது மெஜாரிட்டியினர் இலங்கையையே தேர்ந்தெடுத்தனர். என்று தெரிகிறது.

சின்மன் ஆயுதக்குருந்தும் ஓட்டம்!

ஹாங்ஹாங், மே 19—

அமாய்க்கு 20 மைல் வடகிழக்கிலுள்ள சின்மன் தீவிலிருந்து 50,000 சியாங் துருப்புகளை போர்மோஸாவுக்கு வாபஸ் விட்டன. மாசோவுக்குத் தெற்கி துள்ள லாட்ரோன் தீவிலிருந்து சியாங் படைகள் சீக்கிரமே வாபசாகும் எனத் தெரிகிறது.

மனைவி இருக்கையில் மறுமணம் செய்யக்கூடாது

—(0)—

இந்திய ராணுவத்தில் சமூகச் சீர்திருத்தம்

புதுடெல்லி, மே 17—

இந்திய ராணுவத்திலுள்ள ஒருவர், தன் மனைவி உயிருடன் இருக்கையில் வேறொரு பெண்ணை மணம் செய்துகொள்ளக்கூடாது. அப்படிச் செய்து கொள்ள வேண்டுமானால், அதற்கானகாரணங்களை வெளியிட்டு சர்க்கார் அனுமதி பெறவேண்டும்.

ஏற்கனவேயுள்ளமனைவிக்கு பைத்தியமா அல்லது கணவனைவிட்டு ஓடிப்போய்விட்டாளா என்பது மனுவில் தெளிவாக்கப்பட வேணடும். அப்படிஇல்லைஎன்றால், முதல் மனைவி அவருடன் சேர்ந்து இருக்கப்போகிறாளா; தனியாக இருக்கப்போகிறாளா, தனியாக இருப்பதென்றால், எவ்வளவு ஜீவனாம்சம் கொடுக்க படுகிறது. எவ்வளவு குழந்தைகள் இருக்கின்றன முதலிய தகவல்களெல்லாம்வெளியிட வேண்டுமாம். —ரூனோப்

ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகள்

திருவாரூர், மே 16—

இங்கிருந்து எட்டு மைல் தூரத்திலுள்ள திருக்காரவாசல் கிராமத்தில், தோழர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை மனைவி தோழியர் காமாக்ஷி அம்மாளுக்கு சேர்ந்து ஏககாலத்தில் நான்கு குழந்தைகள் பிறந்தன.

2 ஆண்-2 பெண். ஆனால் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் இறந்துவிட்டன. மற்ற இரு சிசுக்களும் சுகம். இதே மாதிரி சுமார் 6, 7 ஆண்களுக்கு முன் கொடிக்கால்பாளையத்தில் ஒரு முஸ்லீம் பெண்நான்குகுழந்தைகளைப்பெற்றதாகக் கூறப்படுகிறது.

பேர்லினில் படை ஒத்திகை

பெர்லின், மே 18—

மே 28-ந் தேதி 'விட்ஸன்' ஆர்ப்பாட்டங்கள் ஏற்பட்டால் அதை ஒடுக்குவதற்கு மூவல்லரசுப் படைகள் கூட்டாக ஒத்திகை செய்து பார்த்துக்கொண்டன.

அறிவிப்பு

ரெஜினா மூட்டைப் பவுடர் மூட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி, அயர்ந்த நித்திரையைத் தருகிறது.

G. பழனியப்ப முதலியார், மதுரை.

ஏஜண்டு தேவை

திருச்சியில் நமது "மாலை மணி"யை விற்பனை செய்ய முன்பணம் கட்டக்கூடிய பொறுப்புள்ள ஏஜண்டு தேவை!

நிர்வாகி,
"மாலைமணி"

கணவன்-மனைவி நல்லுறவு

பாதிரியார் கண்டறிந்த உண்மைகள்!

லண்டன், மே 19—

அறையிலுள்ள மேஜை, நாற்காலிகள் முதலியவைகளை இருக்கும் இடத்திலிருந்து வேறு இடுசில் மாற்றி அமைப்பதுபோன்ற சில்லரைக் காரியங்கள் மூலம் கணவனுக்கும், மனைவிக்குமிடையே சௌஜன்ய உறவு நீடிக்கச் செய்ய முடியும் என்று ஒரு லண்டன் பாதிரி கூறுகிறார்.

40 வயது முதல் 50 வயதுவரை உள்ள தம்பதிகள் தங்களிடையே தகராறு ஏற்படாமல் பார்த்துக்கொள்ள, சில யோசனைகளை இவர் வெளியிட்டிருக்கிறார்.

உடைகளைகவர்ச்சிகரமாகஉடுத்த வேண்டும். பார்வைக்கு நல்ல தோற்றம் அளிக்கும்படி செய்துகொள்ளவேண்டும். கணவன்—மனைவி தனித்தனியாக வெவ்வேறு விஷயங்களில் விசேஷக் கவனம் செலுத்தி, கருத்து வேற்றுமை ஏற்படுத்திக்கொள்ளக்கூடாது. ஒருவர் மீது ஒருவர் ஆதிக்கம்செலுத்த முயற்சி செய்யக்கூடாது. மனக்கஷ்டத்தினால் அலுப்பு ஏற்பட்டுவிடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஹைதராபாத், மே 18—

மத்திய சர்க்காரின் கொள்கைப்படி "கூலி" என்று அழைப்பதை நிறுத்தி, அதற்குப்பதில் "மஸ்தூர்" என்று அழைக்க ஹைதராபாத் சர்க்கார் தீர்மானித்துள்ளனர் என்று ஒரு சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

காட்பாடியில் வைசூரி

7 பேர் மரணம்

காட்பாடி, மே 18—

வேலூருக்கு அருகில் உள்ள காட்பாடி என்னுமிடத்தில் வைசூரி நோய் பரவி வருகிறது. இதுவரை 37 பேருக்கு இவ்வியாதி கண்டு 7 பேர் உயிரிழந்திருக்கின்றனர்.

நிமிஷத்திற்கு 1500 சிகரெட்டுகள் தயாரிப்பு

லண்டன், மே. 19—

ஒரு நிமிஷத்திற்கு 1500 சிகரெட்களைத் தயாரிக்கும்இயந்திரம் ஒன்று இங்குள்ள புகையிலைத் தொழிற்சாலையில் பரிசிக்கப்பட்டு வருகிறது.

இந்த இயந்திரத்தை ஓட்ட ஒரு மனிதனும், இருபெண்களும் இருந்தால் போதுமாம். ஆரம்பமுதல் கடைசிவரையில் புகையிலை, கையினால் படாமலே சிகரெட் தயாரிக்க முடிகிறதாம்.

இதைக்கண்டுபிடித்தவர் ஒரு ஜெர்மானியராம்.

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMar-Chetty Street, Madras-1.